# கல்குடா கல்வி வலய,இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான
# க.பொ.த. உயர்தரம் செயலட்டை:04
# இந்து நாகரிகம் – இந்துசமயம்
## பல்தேர்வு வினா விடை


*'சைவப் புலவர்' 'இந்து தர்மாசிரியர்'*

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**

B.A. (Hons), Dip. in.Edu.(NIE), Dip.in.Office Administration (First class), Dip.in.Tamil(Colombo Tamil sangam), Dip.in.Tamil(UOP),Dip.in.School Management(Merit Pass),

**மட்/ககு - பேத்தாழை விபுலானந்தாக் கல்லூரி, வாழைச்சேனை.**


<u>அறிவுறுத்தல்கள்</u>:

* எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1),(2),(3),(4),(5) என எண்ணிடப்பட்டுள்ள விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

1.'சிற்பி' எனப்படுபவன்.
1.தொழில்நுட்பத் திறனோடு கூடிய சிற்பக்கலையிலேதேர்ச்சி பெற்ற கலைஞன்
2. இசைத்துறையிலே மேன்மையடைந்தவன் 3. ஆலயக் கிரியைகளில் கைதேர்ந்தவன்
4. நடனக் கலையில் தேர்ந்தவன் 5. சிற்பங்களைச் செதுக்குபவன்

2. வேதாந்த சூத்திரம் எனப்படுவது.
1. வேதத்தின் விளக்கம் 2. உபநிடதங்களின் விரிவு 3. உபநிடதங்களின் சாரம்
4. பிராமணங்களின் விளக்கம் 5. ஆரணியங்களின் தொகுப்பு

3. உயிர்கள் அனைத்தும் உலகமும் இறைவனது சரீரம் எனக் கூறியவர்.
1. மத்துவர் 2. பாதராயணர் 3. சங்கரர் 4. இராமாநுஜர் 5. பதஞ்சலி

4. இந்திய தத்துவ மரபில் அவைதிகம் எனக் குறிக்கப்படுபவை.
1. பௌத்தம், அத்வைதம், உலகாயதம் 2. பௌத்தம், சமணம், உலகாயதம்
3. உலகாயதம், வைசேடிகம், துவைதம் 4. சாங்கியம், மீமாம்சை, யோகம்
5. நியாயம், பௌத்தம், சமணம்

5. சைவ சித்தாந்தத்தில் இறைவனுக்கு சொரூபம் என வருணிக்கப் படுவதன் பொருள்.
1. குணங்குறிகளைக் கடந்த நிலை 2. தனக்கேயுரிய குணங்குறிகளுடன் கூடிய நிலை
3. பெரியவற்றுள் பெரிதாக இருக்கும் நிலை 4. சிறியவற்றுள் சிறிதாக இருக்கும் நிலை
5. சிவலிங்க வடிவம்

6. சிவ விக்கிரகவியலில் இலிங்கோற்ப வடிவம் உணர்த்துவது.
1. எண்குணங்கள் 2. சரியை, கிரியை, யோகம், ஞானம் 3. ஆணவம், கன்மம், மாயை
4. ஐந்தொழில்கள் 5. பரம்பொருட் தன்மை

7. சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்கள்.
1. சிவன், முருகன் 2. இந்திரன், வருணன் 3. முருகன், இந்திரன்
4. சிவன், அம்மன் 5. சிவன், அக்கினி

8. சைவசமய மரபிலே கோயில் எனப்படுவது.
1. திருவாலவாய் 2. தஞ்சைப் பெரியகோயில்3. சிதம்பரம் 4. திருவாரூர் 5. திருவையாறு

9. துவைதம் என்னும் வேதாந்தப் பிரிவின் ஸ்தாபகரானவர்.
1. பாதராயணர் 2. திருமூலர் 3. ஈஸ்வர கிருஸ்ணர் 4. மத்துவர் 5. ஸ்ரீ சைதன்யர்

10."சத்தியமான பொருள் ஒன்றுதான் உள்ளது: அதனையே அறிஞர் வெவ்வேறு பெயர்களால் குறிக்கின்றனர்" என்ற இவ்வாசகம் இடம்பெறும் நூல்.
1. ஆகமம் 2. புராணம் 3. இருக்கு வேதம்4. மகாபாரதம் 5. இராமாயணம்

11. மாண்டுக்கிய உபநிடதத்தை விளக்கி மாண்டுக்கிய காரிகை என்ற நூலை எழுதியவர்.
1. வியாசர் 2. மத்துவர் 3. கௌடபாதர்4. சங்கரர் 5. யாக்ஞவல்கியர்

12. கல்வெட்டு ஒன்றின் மூலம் தான் ஒரு சைவ சித்தாந்தி என வெளிப்படுத்திய மன்னன்.
1. முதலாம் இராஜராஜன் 2. இராஜசிம்ம பல்லவன் 3. குலோத்துங்கன்
4. மகேந்திரவர்மன் 5. இராஜேந்திரன்

13. ''மூவகை வித்தை'' என்ற பொருளில் வரும் 'திரயீ வித்யா' என்ற சொல் குறிப்பது.
   1. உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை   2. இருக்கு, யசுர், சாமம்
   3. இதிகாசம், புராணம், தர்மசாத்திரம்   4. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா
   5. கல்வி, கலை, ஞானம்
14.ஆன்மாவுக்குரிய முக்கிய குணம் ஞானமுடைமை.இந்த ஞானத்தை'தர்மபூதஞானம்'எனக் குறிப்பிட்டவர்.
   1. சங்கரர்   2. பாதராயணர்   3.இராமானுஜர்   4. தாயுமானவர்   5.மெய்கண்டார்
15. உபநிடதங்களின் பெயர்களானவை.
   1. கேன,ஈஸ, சதபத, ஐதரேய   2. பிருஹதாரண்ய, கட,ஈஸ, ஆன்வீகி
   3. ஐதரேய, யஜுர், சம்ஹிதை,ஈஸோவாஸ்ய   4. பிருகதாரண்ய, ஸ்வேதாஸ்வதர, கட,ஈஸ
   5. அதர்வணம், ஐதரேய, சதபத, மாண்டுக்கிய
16. புராணங்கள் கூறும் முனிவர்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
   1. அகஸ்தியர், வசிட்டர், வாமதேவர், அஸ்வத்தாமா, பீஸ்மர்
   2. விஸ்வாமித்திரர், பரசுராமர், துரோணர், கிருஸ்ணர், விதுரன்
   3. வியாசர், அகஸ்தியர், பராசரர், வசிட்டர், விஸ்வாமித்திரர்
   4. அகஸ்தியர், யமதக்னி, வியாசர், பீஸ்மர், துரோணர்
   5. அத்திரி, வசிட்டர், வாமதேவர், ரிஸ்யசிருங்கர், புரூரவஸ்
17. இந்துசமயத்துக்கு ஆதரவளித்த அரசரின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
   1.மகாபத்மநந்தன், அசோகன், முதலாம் சந்திரகுப்தன், இரண்டாம் புலிகேசி, ஸ்ரீ ஹர்ஷன்
   2.கரிகாலசோழன், கோச்செங்கணான், சந்திரகுப்த மௌரியன், முதலாம் விஜயபாகு, மாறவர்மன் சுந்தரபாண்டியன்.
   3.புஷ்யமித்திர சுங்கன், சமுத்திர குப்தன், குமார குப்தன், கௌதமீ புத்திர சாதகர்ணி, முதலாம் குலோத்துங்க சோழன்
   4.அசோகன், இராசராச சோழன்,ஈசானவர்மன், கனிஷ்கன், மகாசேனன்
   5.சுந்தரசோழன், சோமேஸ்வரன், கிருஷ்ணதேவராயர், அஜாதசத்துரு, அசோகன்
18. தர்ம சாஸ்திரங்களின் ஆசிரியரின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
   1. கௌதமர், நாரதர், கௌடல்யர், வியாசர்   2.வசிஷ்டர்,ஆபஸ்தம்பர், கிருஸ்ணர், காளிதாசர்
   3. வீஷ்மர், வாமதேவர், விஷ்ணு, மனு   4. மனு, நாரதர், விஷ்ணு, சுக்ராச்சாரியார்
   5. காமாண்டகர், காளிதாசர், மனு, கௌதமர்
19. பன்னிரு திருமுறைகளில் உள்ள நூல்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
   1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், பொன்வண்ணத்தந்தாதி, பரிபாடல், கல்லாடம்.
   2. திருவாசகம், திருமந்திரம், கண்ணப்பர் திருமறம், திருவிளையாடற் புராணம்.
   3. திருவிரட்டை நான்மணிமாலை, திருவாசகம்,திருக்கோவையார், திருப்புகழ்
   4. திருவாசகம், திருக்கோவையார், திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம்
   5. பரிபாடல், திருமந்திரம், திருப்பாவை, திருச்சண்பை விருத்தம்
20. பக்தி பற்றிப் பிரமாண ரீதியில் பக்தி சூத்திரங்களாக எழுதியவர்.
   1. வியாஸர்   2. வால்மீகி   3. நாரதர்   4. வசிட்டர்   5. விஷ்ணு
21.பிரமத்தின் இருமையற்ற நிலை, உலகத்தின் உண்மையற்ற நிலை, பிரமத்திலிருந்து ஆன்மா வேறுபடா நிலை என்ற உண்மைகளைப் போதிப்பது.
   1.அத்வைதம்   2.விசிட்டாத்வைதம்   3.பௌத்தம்   4.சமணம்   5. ஆசீவகம்
22. மத்துவர் உருவாக்கிய கொள்கையில் இரண்டும் இரண்டுதான். இரண்டும் ஒன்றல்ல என்று குறிப்பிட்ட இரண்டு பொருள்கள்.
   1. உலகமும் இறைவனும்   2. ஆன்மாவும் இறைவனும்   3. ஆன்மாவும் உலகமும்
   4. உலகமும் பிரமமும்   5. ஆன்மாவும் கன்மங்களும்
23. இந்து தத்துவ உண்மைகளை உபநிடதங்கள் வெளிப்படுத்தும் முறைகள்.
   1. உரையாடல், செய்முறை, பஜனை   2. விரிவுரை, விவாதம், பாவனை
   3. உரையாடல், விசாரம், போதனை   4. விவாதம், செய்முறை, உரையாடல்
   5. செய்முறை, தியானம், பாவனை

24. விமான கோஷ்டங்களில் வரும் தேவர்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
   1. தஷிணாமூர்த்தி, மகாவிஸ்ணு, பிரமன், மகாலட்மி, காமாந்தகர்
   2. லிங்கோத்பவர், தஷிணாமூர்த்தி, விநாயகர், பிரமன், துர்க்கை
   3. தஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரமன், விஸ்ணு, மகாலட்மி
   4. திரிபுராந்தகர், லிங்கோத்பவர், காலாரிமூர்த்தி, விநாயகர், குமாரக் கடவுள்
   5. உமா மகேஸ்வரர், காமாந்தகர், அர்த்தநாரீஸ்வரர், சோமாஸ்கந்தர், நடராஜர்

25. இருக்கு வேதத்தில் உள்ள மண்டலங்களின் எண்ணிக்கை.
1. ஏழு 2. பத்து 3. பன்னிரண்டு 4. எட்டு 5. பதினாறு

26. மகாபுராணங்களின் வரிசையில் மார்க்கண்டேய புராணம், லிங்க புராணம் ஆகியவை சிறப்பாகப் போற்றும் தெய்வம்.
1. சிவன் 2. விநாயகர் 3. அக்கினி 4. பிரமன் 5. விஸ்ணு

27. மத்துவர் பாஷ்யங்கள் எழுதிய நூல்களின் தொகுதி.
1. பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, உபநிடதம்
2. மாண்டுக்கிய காரிகை, பிரம்ம சூத்திரம், பகவத்கீதை
3. பிரம்ம சூத்திரம், யோகசூத்திரம், பகவத்கீதை
4. பகவத்கீதை, வேதசாரம், யோகசூத்திரம்
5. சுப்பிரபேதம், பிரம்மசூத்திரம், இரத்னாவலி

28.சங்கரர் கயிறு–பாம்பு என்ற உதாரணத்தின்மூலம் பிரமம் உண்மையென நிரூபிக்கமேற்கொண்ட வாதம்.
1. பரிணாம வாதம் 2. விவர்த்த வாதம் 3. ஏகான்ம வாதம் 4. பிரம்ம வாதம்
5. சற்காரிய வாதம்

29. சைவ சித்தாந்தத்தின் குணங்குறிகளுடனான இறைவனது இயல்பைச் சுட்டும் சொல்.
1. அநாதி 2. அவதாரம் 3. தடத்தம் 4. சொரூபம் 5. விமர்சம்

30. சிவபெருமானின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
1.உருத்திரன், சிவன், விசாகன், வைத்தியநாதன், சம்பு
2.தாணு, பதஞ்சலி, தியாகராஜர்,ஈசானன், முகுந்தன்
3.சம்பு, சதாசிவன், வைத்தீஸ்வரன்,ஈசானன், மகேஸ்வரன்
4.கோகர்ணேஸ்வரர், சுயம்புநாதர், மணிகண்டர், கோவிந்தர், பரமேஸ்வரன்
5.பரமேஸ்வரன்,ஈசானன், தஷிணாமூர்த்தி, லம்போதரன், நீலகண்டன்

31. ஆழ்வார்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
1. பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார், நாதமுனிகள்
2. பூதத்தாழ்வார், கோதைநாச்சியார், பெரியாழ்வார், இராமானுஜர், ஆளவந்தான்
3. தொண்டரடிப்பொடியாழ்வார்,பேயாழ்வார்,திருப்பாணாழ்வார்,வேதாந்ததேசிகர்,பிள்ளைலோகாச்சாரியார்
4. பொய்கையாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், திருமழிசையாழ்வார்
5. ஆண்டாள், பொய்கையாழ்வார், பெரியாழ்வார், வேதாந்த தேசிகர், மணவாள முனி

32. ‘ஏகம் சத்’– சத்தியமான பொருள் ஒன்றே என்ற தத்துவக் கருத்தை முதன் முதலாக குறிப்பிடுவது.
1. இருக்கு வேதம் 2. மகாபாரதம் 3. இலிங்க புராணம்4. சாம வேதம் 5. இராமாயணம்

33. வாஸ்து சாஸ்திரம் குறிப்பிடும் கலை.
1. இசை 2. நாட்டியம் 3. கோயிற்கட்டடக்கலை
4. கிரியைகள் ஆற்றும் முறை 5. வாத்தியங்கள் வாசிக்கும் முறை

34. நவீன காலத்துச் சமய சீர்திருத்தவாதிகளின் பெயர்கள் அடங்கிய தொகுதி.
1. இராமானுஜர், இராமகிருஸ்ணர், துளசிதாஸர், ஆறுமுக நாவலர்
2. ஸ்ரீசைதன்யர், சுவாமி விபுலானந்தர், மகாத்மாகாந்தி, தயானந்தர்
3. தயானந்தர், இராமகிருஸ்ணர், விவேகானந்தர், ஆறுமுகநாவலர்
4. ராஜாராம் மோகன்ராய், மீராபாய், ஸ்ரீசைதன்யர், தயானந்தர்
5. இராமானந்தர், விவேகானந்தர், சுப்பிரமணிய பாரதியார், வள்ளலார்

35.இந்துசமூக நன்மைக்காகப் பிரயோகிக்கப்படும்‘பௌஸ்டிகானி’என்னும் மந்திரங்களைக்கொண்ட வேதம்.
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம் 5. பகவத்கீதை

36. சீவன் முத்தி எனப்படுவது.
1. அந்நியேஷ்டி கிரியை நிகழ்ந்தபின் கிட்டுவது 2. இந்த உடலோடு இருக்கும்போதே பெறப்படுவது.
3. உடலைவிட்டு சீவன் நீங்கிய பின் கிட்டுவது 4. இல்லற நிலையில் இருக்கும்போது கிட்டுவது
5. பிரமச்சரிய நிலையில் பெறப்படுவது

37. பிரபத்தியைக் கைக்கொள்வதன் மூலம் முத்தி கைகூடும் என்ற கொள்கைக்குரியவர்.
1. சங்கரர் 2. இராமானுஜர் 3. ரமணர் 4. வியாசர் 5. சித்பவானந்தர்

38. உபநிடதங்களைக் குறித்து நிற்கும் பெயர்.
1. வேதாங்கம் 2. வேதாந்தம்3. யோகவாசிஷ்டம் 4. சதருத்திரியம் 5. பிரமவேதம்

39. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் தங்கமருமங்களில் சித்தியையும் இன்பத்தையும் அளிக்கும் அத்ரவ வேத மந்திரங்களைக் குறிக்கும் பெயர்.
1. பேஷஜானி 2. அபிசாரணி 3. பௌஷ்டிகாணி 4. ஆப்ரீ சூக்தம் 5. ரோகித சூக்தம்

40. வேதகால மக்களது செல்வத்தை அளவிடுவதற்கு உதவியது.
1.பணம் 2.காணிவளவு 3.பசு 4.தங்கம் 5.வெள்ளி

41. அவைதிக சமயங்கள் எனச் சுட்டப்படுபவை.
 1. வேதத்தை ஏற்று ஆகமத்தை ஏற்காதவை  2. வேதத்தை ஏற்றுக் கொள்ளாதவை
 3. ஆகமத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்பவை  4. வேதத்தை அவ்வப்போது ஏற்றுக் கொள்பவை
 5. வேதத்தை மட்டும் ஏற்றுக் கொள்பவை

42. அரசர்களின் நன்மை கருதி செய்யப்படும் ராஜகர்மாணி என்னும் கிரியை பற்றிக் கூறுவது.
 1. இருக்கு வேதம்  2. யசுர் வேதம்  3. சாம வேதம் 4. அதர்வ வேதம்  5. மகாபாரதம்

43. பிரம்மசூத்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய விளக்கவுரை.
 1. வேதாந்த தீபம்  2. அத்வைத சூடாமணி  3. ஸ்ரீபாஷ்யம் 4. வேதாந்த சங்கிரகம்
 5. வேதாந்த சாரம்

44. ஆன்மாக்கள் மோட்சத்தில் அனுபவிக்கும் ஆனந்தத்திற்கூட அவைகளின் இயல்புக்குத் தக ஏற்றத்தாழ்வு உண்டென்ற கொள்கை உடையவர்.
 1. இராமானுஜர்  2. சங்கரர்  3. ஸ்ரீ இராமகிருஸ்ணர் 4. மத்துவர்  5. ஸ்ரீ தயானந்த சரஸ்வதி

45. சிவவடிவங்களுக்குரிய அளவுப் பிரமாணம்.
 1.பஞ்சதாளம் 2.உத்தம தசதாலம்  3.உத்தம நவதாலம் 4. மத்திம தசதாலம்  5. மத்திம நவதாலம்

46. இறைவனது அருவத் திருமேனிகள் அடங்கும் தொகுதி.
 1. மகேஸ்வரன், தட்சணாமூர்த்தி, சிவம், சக்தி  2. சிவம், சக்தி, மகேஸ்வரன், உருத்திரன்
 3. சிவம், சக்தி, நாதம், விந்து  4. நாதம், விந்து, பிரமா, உருத்திரன்
 5. உருத்திரன், விந்து, நாதம், நடராசர்

47. ஆணவத்தின் வடிவம் எவ்வாறு இருக்கும் என மெய்கண்டாரிடம் வினவியவர்.
 1. உமாபதி சிவாச்சாரியார்  2. அருணகிரிநாதர்  3. அருணந்தி சிவாச்சாரியார்
 4. பரஞ்சோதி முனிவர்  5. சனற்குமாரர்

48. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் மூவகை ஆன்மாக்கள் அடங்கும் தொகுதி.
 1. சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்  2. சகலர், பிரளாயகலர், விஞ்ஞானகலர்
 3. ஆணவம், கன்மம், மாயை  4. சாத்துவிகம், இராசதம், தாமசம்
 5. அருவம், உருவம், அருவுருவம்

49. விஷ்ணு தத்துவ நிர்ணயம் என்ற நூலின் ஆசிரியர்.
 1. இராமானுஜர்  2. நிம்பாக்கம்  3. மத்துவர் 4. வல்லபர்  5. நம்மாழ்வார்

50. சோமாஸ்கந்த மூர்த்தியில் இடம்பெறும் மூர்த்தங்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி.
 1. சிவன், உமை, விஷ்ணு  2. சிவன், உமை, விநாயகர்
 3. சிவன், ஸ்கந்தன், தெய்வயானை  4. சிவன், உமை, ஸ்கந்தன்
 5. சோமன், உமை, ஐயனார்

**(50×2=100 புள்ளிகள்)**